தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975 ஏப்ரல் 18.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. என். துரைபாண்டியன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீத்தார் நினைவுக் குறிப்பு. 1963 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை நாங்குனேரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. என். துரைபாண்டியன் அவர்கள் 15—4—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

(2) வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Pay of workers of Electricity Board.

*4 S. N. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state —

(a) whether any negotiation between the workers and the State Electricity Board on the revision of the pay scales of the workers of the Board was held during April, 1975; and

(b) if so, the details thereof?